FWC

**வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**
**தவணைப் பரீட்சை, மார்ச் - 2020**

**Conducted by Field Work Centre, Thondaimanaru**
**In Collaboration with Provincial Department of Education**
**Northern Province**
**Term Examination, March - 2020**

| தரம் :- 13 (2020) | ஐரோப்பிய வரலாறு | புள்ளித்திட்டம் |
|---|---|---|



## பகுதி I

| | | | |
|---|---|---|---|
| 1) 3 | 11) 3 | 21) 3 | 31) 4 |
| 2) 1 | 12) 5 | 22) 3 | 32) 2 |
| 3) 3 | 13) 2 | 23) 4 | 33) 1 |
| 4) 2 | 14) 1 | 24) 5 | 34) 3 |
| 5) 3 | 15) 4 | 25) 4 | 35) 4 |
| 6) 5 | 16) 3 | 26) 3 | 36) 5 |
| 7) 5 | 17) 2 | 27) 5 | 37) 1 |
| 8) 3 | 18) 5 | 28) 4 | 38) 2 |
| 9) 4 | 19) 3 | 29) 2 | 39) 1 |
| 10) 2 | 20) 2 | 30) 2 | 40) 2 |

## பகுதி A

1) படம் குறித்தல்

## பகுதி B

2) 1.

- யூலியஸ் சிசர்
- ஒகஸ்டஸ் சிசர்
- நிரோ

2.

- வடக்கு - அல்ப்ஸ் மலைத்தொடர்
- தெற்கு - மத்திய தரைக்கடல்
- கிழக்கு - ஏற்றியாற்றிக் கடல்
- மேற்கு - மத்திய தரைக்கடல்

3.

- குழு ஆட்சி முறையில் கொன்சல் ஆட்சி முறை காணப்பட்டது
- இரண்டு கொன்சல்கள் காணப்பட்டனர்.
- செனட் சபை மூத்த குடிமக்களிடம் இருந்து தெரிவு செய்யப்பட்டது
- கொன்சல்கள் நீதிபதிகளாகவும், படைத்தளபதிகளாகவும் பணியாற்றினர்.

3) 1.

- பழைய உரோமைப் பண்பாடு அழியாது காணப்பட்டமை
- மாணவர்கள் சட்டம், வைத்தியம் போன்ற பாடங்களை விரும்பியமை
- நிலமானிய முறை இத்தாலியில் பலவீனம் அடைந்தமை
- கலைகளுக்கு ஆதரவளிக்கும் செல்வந்தர்கள் காணப்பட்டமை
- பாப்பரசர்கள் கலைஞர்களை ஆதரித்தமை
  நகரைமையமாகக் கொண்ட ஆட்சி காணப்பட்டது

2. மத்திய காலத்தில் மறைந்திருந்த கிரேக்க – உரோம நாகரீகங்கள் புத்துயிர் பெற்றமையே மறுமலர்ச்சி என்பதினால் கருதப்படும்.

- ♦ கிரேக்க இலத்தீன் மொழிகள் புத்துயிர் பெற்றமை
- ♦ மானிடவாத எழுச்சி
- ♦ கட்டடக்கலை முன்னேற்றம்
- ♦ சிறந்த கலைஞர்கள் காணப்படுதல்
- ♦ விஞ்ஞான அறிவு வளர்ச்சியுற்றது

4) 1) ஸ்டேட் ஜெனரல்

2) 16ம் லூயி, மேரி அன்டோனற்

3) சமுதாயத்தில் மூன்று பிரிவினர் காணப்படுதல்
   1. குருமார்கள்
   2. பிரபுக்கள்
   3. சாதாரண மக்கள்

4)
   1. மத்திய வகுப்பினர் புரட்சிக்கு தலைமை வகித்தல்
   2. நவீன குடியரசு உருவாதல்
   3. மனித உரிமை பிரகடனம் வெளியிடப்படுதல்
   4. மானிய முறை வீழ்ச்சியடைந்தமை
   5. பிறப்பை விட தகுதி முக்கியம் பெறுதல்
   6. சுதந்திரம், சமத்துவம், சகோரத்துவத்தை அடிப்படையாக கொண்ட சமூகம் உருவாதல்

**ஆரசியல் காரணிகள்**
உரோமப் பேரரசுக்கும் ஜேர்மன் இளவரசர்களுக்கும் இடையே ஏற்பட்ட அதிகாரம் தொடர்பாக முரண்பாடுகளும் மோதல்களும், ஐரோப்பாவில் இருந்த தேசிய அரசுகளுக்கு இடையிலான போட்டி.**ள**

**விளைவுகள் :-** சமயமோதல் முடிவுக்கு வந்தது, வெஸ்ற் போலியா உடன்படிக்கை ஏற்படல், உரோமப் பேரரசின் தலைமையிலான கத்தோலிக்கர் போரில் தோல்வியடைந்தமை, பிரான்சின் தலைமையிலான புரட்டஸ்தாந்து வெற்றி பெறல் ஜேர்மனி ஒன்றிணைய முடியவில்லை. அவ்வாறு இணைய நீண்டகாலம் ஏற்பட்டது, ஹப்ஸ்பேர்க் அரச பரம்பரையின் அதிகாரத்தை ஒழிக்கும் நோக்குடன் போரில் ஈடுபட்ட பிரான்ஸ் அதில் வெற்றி கண்டது. அத்தோடு பிரான்ஸ் ஐரோப்பாவில் முதன்மையான இடத்தைப் பெற்றது, பால்டிக் கடற் பிரதேசத்தில் வர்த்தகத்தில் ஈடுபடத் தருணம் பாரத்திருந்த சுவீடனின் நோக்கம் நிறைவேறியது, உரோமப் பேரரசின் அதிகாரமும் முக்கியத்துவமும் குறைவடைதல், ஜேர்மனியின் பௌதீக வளங்களும் உயிர்களும் சேதம் ஏற்படல், சுவிற்சலாந்து, நெதர்லாந்து சுதந்திர அரசுகளாக ஆக்கப்படல்.

5) 1) கோர்சிக்கா தீவு

2) இத்தாலியை ஆக்கிரமித்தல், எகிப்தை ஆக்கிரமித்தல்

3) மூன்று கொன்சல்களில் பிரதான கொன்சலராகப் பதவி வகித்தமை

4) பலரது ஆதிக்கத்தின் கீழ் இருந்த நிறுவனங்களைக் கலைத்து பிரான்சியப் புரட்சியின் செயற்பாடுகளை முன்னெடுத்துச் சென்றமை பிரான்சிய சமுதாயத்தில் பல தாக்கங்களை ஏற்படுத்தியது. பலம் வாய்ந்த மத்திய அரசை ஏற்படுத்தி நிர்வாகத்தை ஒரு முகப்படுத்தல், பாப்பரசருடன் இணக்கத்தை ஏற்படுத்தல். புரட்சியின் போது கத்தோலிக்கத் திருச்சபை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தங்களைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லல், நெப்போலியனின் நீதித் தொகுப்பு, கல்விச் சீர்திருத்தங்கள், பொருளாதாரத்தைப் பலப்படுத்தல், வெளிநாட்டுக் கொள்கை, பிரான்சை மையமாகக் கொண்ட பேரரசைக் கட்டியெழுப்ப முயலுதல், தனது ஆட்சியின் கீழ் கொண்டு வரப்பட்ட பரதேசங்களில் அரசியல் சமூக பொருளாதார மாற்றங்களை ஏற்படுத்த நடவடிக்கையை மேற்கொள்ளல், நெப்போலியனின் உள்நாட்டு வெளிநாட்டுக் கொள்கைகளை நோக்கின் அவன் ஐரோப்பாவில் இருந்தவர்களில் சிறந்த அரசியல் மேதை எனக்கொள்ளலாம்.

**சிறுகுறிப்பு**

1) **மார்டின் லூதர் :** 1455 ஜேர்மனியில் தியூரிஞ்ஞா எனும் இடத்தில் பிறந்தார். சமயத்துடன் ஈடுபாடு கொண்டவர். ஒஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் சட்டம் பயின்ற போதிலும் பின்னர் இறையியல் மெய்யியல் பயின்றார். 1505 இல் புனித அகஸ்ரின் சபையில் சேர்ந்து குருவான இவர் புனித அகஸ்ரின் நூல்களைக் கற்றார். 1511 இல் விற்றன்பேர்க் பல்கலைக்கழகத்தில் இறையியல் பேராசிரியராக நியமனம் பெறல் வேதாகமம் பற்றி ஆழமாகக் கற்றல். 1517 இல் ஜோன்ரெற்செல் பாவமன்னிப்புச் சீட்டு விற்றபோது லூதர் அதற்குத் தன் கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்தார். நியாயங்களைக் காட்டி விற்றன்பேர்க் கோயில் கதவில் அறிக்கையிட்டார். லூதரின் கொள்கைகள் புரட்டஸ்தாந்து மதச் சீர்திருத்திற்கு வழிகோலியது. பாப்பரசர் லூதரை திருச்சபையிலிருந்து நீக்கினார். பரிசுத்த உரோமப் பேரரசு லூதருக்கு எதிராக நடவடிக்கை எடுத்தல். உரோமப் பேரரசின் ஆதிக்கத்திலிருந்து சுதந்திரம் பெறுவதற்கு முயன்ற ஜேர்மன் இளவரசர்களின் உதவி லூதருக்குக் கிடைத்தது. இதனால் லூதரின் புரட்டஸ்தாந்து மதம் வளர்ச்சியுற்றது. 1555 ஆம் ஆண்டு ஒக்டோபர் நடைபெற்ற மகாநாட்டில் லூதர் வாதம் மதமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. சுமயச் சீர்திருத்திற்கு உழைத்தார்.

2) **இங்கிலாந்தில் ஏற்பட்ட 1688 ஆம் ஆண்டு புகழ்மிக்க புரட்சி :**

அரசனுக்கும் பாராளுமன்றத்திற்கும் அதிகாரம் தொடர்பாக ஏற்பட்ட தகராறு புரட்சி வரை செல்லல், ஸ்டுவட் வம்ச அரசர்கள் அரசனின் அதிகாரத்தை அதிகரித்துக் கொள்வதற்கும் பாராளுமன்றத்தைப் புறக்கணிப்பதற்கும் முயன்றமை, ஸ்டுவர்ட் அரசர்கள் கத்தோலிக்க மதத்தவர்களாக இருந்தமையும், பாராளுமன்றதோர் புரட்டஸ்தாந்தராக இருந்தமையும் இரு சாராரது மோதலுக்கு முக்கிய காரணங்களாகியமை.

**பரவல் :**

1642 இல் சிவில் யுத்தம் ஆரம்பமாதல், 1649 இல் 1ம் சாள்ஸ் மன்னன் சிரச்சேதம் செய்யப்பட்டமை, குரொம்வெல்லின் தலைமையில் கூட்டரசங்கம் ஏற்படல், 1658 இல் மீண்டும் மன்னராட்சி ஏற்படல், 2ம் சாள்ஸ் அரசனாதல் அவன் தன் எண்ணப்படி ஆட்சி செய்ய முயன்றமை, 1685 ஆம் ஆண்டில் 2ம் ஜேம்ஸ் அரசனாதல் அவனும் தன் எண்ணப்படி ஆட்சி செய்தல், 1688 இல் புரட்சி ஆரம்பம் 2ம் ஜேம்ஸ் நாட்டைவிட்டு ஓடுதல், ஒரேஞ்சின் வில்லியமும் மேரியும் ஆட்சிக்குவரல்.

**விளைவுகள் :**

பாராளுமன்றம் வெற்றி பெறல், அரசனது அதிகாரம் மட்டுப்படுத்தப்படல். 1689 இல் உரிமை தொடர்பான வெளியீடு – அரசன் வரி வசூலிக்கவும் படை வைத்திருக்கவும் பாரளுமன்றத்தின் அமைதிபெற வேண்டும். பாராளுமன்றத்தால் அரசன் ஆட்சிப்பீடத்திற்கு நியமிக்கப்படல், இங்கிலாந்தில் புரட்டஸ்தாந்து மதத்தைச் சேர்ந்தவரே சிம்மாசனத்திற்கு உரிமையுடையவராவார்.

3) **கிரோக்க நகர அரசுகள் :**

நகரை மையமாகக் கொண்ட அரசியல் அலகு. முக்கிய நகர அரசுகள் எதென்ஸ் தீப்ஸ், ஸ்பாட்டா, மிலேட்டஸ் நில அளவிலும் மக்கள் தொகையிலும் சிறிய அரசாக இருந்தமை. எனினும் நிலஅளவிலும் பூர்வீக மக்கள் தொகையிலும் பல்வேறுபட்டதாக இருந்தமை. ஸ்பாட்டா 3000 சதுர மைல்களுக்கு மேற்பட்டது. ஏதென்ஸ் 1060 சதுர மைல்களைக் கொண்டது. இவைகளில் பலவிதமான ஆட்சிமுறை இருந்தது. ஆரசியல் ஒன்றிப்பு இல்லாமை. நகர ஆட்சியை மையமாகக் கொண்டு கிரேக்கப் பண்பாடு வளர்ச்சி அடைந்தமை.

4) **கைத்தொழிற்புரட்சி :**

விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரமுறை மாற்றமடைந்து இயந்திரங்களை உபயோகிப்பதன் மூலம் அனைத்துத் துறைகளிலும் புதியமாற்றத்தைக் கண்டமையே கைத்தொழிற்புரட்சி ஆகும். 18 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இங்கிலாந்தில் ஆரம்பமான இப்புரட்சி 19 ஆம் நூற்றாண்டில் ஐரோப்பா எங்கும் பரவியது. கைத்தொழிற்புரட்சி இங்கிலாந்தில் ஆரம்பமாவதற்கான பின்னணி அக்காலத்தில் கைத்தொழிலில் ஏற்பட்ட பிரதான மாற்றங்கள் கைத்தொழில் புரட்சியின் அரசியல் சமூக பொருளாதாரத் துறைகளில் ஏற்பட்ட மாற்றங்கள் பற்றி எழுதப்படல்.

5) மத்தியகாலத்தில் ஐரோப்பாவில் நிலவிய பொருளாதார சமூக அரசியல் முறை மானியமுறை எனப்படும்.

**மானியமுறை ஏற்படுவதற்கான காரணங்கள் :-**

உரோமப் பேரரசின் இறுதிக் காலத்தில் ஏற்பட்ட பொருளாதார மாற்றங்கள் பாரிய விவசாயப் பண்ணைகள் தோன்றுதல். மிலேச்சர்களின் ஆக்கிரமிப்பின் பின்னர் ஐரோப்பாவில் ஏற்பட்ட குழப்பமான பாதுகாப்பற்ற அரசியல் சூழல் மானியமுறையின் பிரதான இயல்புகள், விவசாயத்தை மையமாகக் கொண்ட பொருளாதாரம் சுயதேவைப் பொருளாதாரம். பணப்புழக்கமும் வர்த்தகமும் மட்டுப்படுத்தப்பட்டமை, சமுதாயம் அரசன் பிரபுக்கள் குருமார் உட்பட சலுகை பெற்ற வகுப்புக்களும், சலுகையற்ற வகுப்புக்களும் தோன்றுதல். சமுதாய நிலை பிறப்பின் மூலம் தீர்மானிக்கப்படல், நிலத்தை அடிப்படையாகக் கொண்ட சேவைத் தொடர்பு அனைத்துப் பிரிவினரிடமும் காணப்படல். அரசியல் ரீதியாக அதிகாரங்கள் குவிந்த முடியாட்சி காணப்படுதல்.

6) 1) பிரஷ்யா

2) சொல்வரைன்சங்கம்

3) .

1. 39 சிறிய அரசுகளாக பிரிந்திருந்தமை
2. ஆஸ்திரிய அதிகாரமும் ஆதிக்கமும்
3. மெற்றனிக் செயற்பாடுகள்
4. வியன்னா மாநாட்டின் முடிவுகளைச் செயற்படுத்த ஐரோப்பிய நாடுகள் இணங்கியமை.
5. ஜேர்மனியில் நிலவிய மானியமுறைப் பண்புகள்
6. தேசிய உணர்வு போதியளவில் தோற்றம் பெறாமை
7. ஜேர்மனியை ஐக்கியப்படுத்த பல்வேறு வழிமுறைகள் முன்வைக்கப்பட்டமை.

4) பிஸ்மார்க் பிரஷ்யாவின் சான்சலராதல் ஜேர்மனியை ஐக்கியப்படுத்த கையாண்ட அல்லது பின்பற்றிய "இரத்தமும் இரும்பும்" என்ற கொள்கை (ஜனநாயக, லிபரல் வாதம் முறைகளிலன்றி யுத்த நடவடிக்கையை மேற்கொண்டமை) என்பன பற்றிக் குறிப்பிட்டு ஜேர்மனி ஐக்கியத்தின் பிரதான கட்டங்களாக பின்வரும் விடயங்களில் கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

1) கி.பி 1864 செலஸ்விக் ஹோல்டைன் பகுதியை மையமாக வைத்து ஆஸ்திரியா, பிரஷ்யாவின் மூலம் டென்மார்க் தோற்கடிக்கப்படல்.

2) கி.பி 1866 இல் ஆஸதிரிய பிரிஷ்யாவிற்கிடையில் நடந்த ஏழுவாரப்போர் பிரஷ்யா ஜேர்மனியில் பலமான சக்தியாக மாறியமை. பிரஷ்யாவின் தலைமையின் கீழ் வட ஜேர்மன் கூட்டினைப்பு உருவாக்கப்பட்டது.

3) கி.பி 1870 – 1871 இல் பிரான்ஸ் - பிரஷ்ய சண்டை இதன் மூலம் தென் ஜேர்மனி அரசுகள் வடஜேர்மன் உட்டமைப்புடன் இணைக்கப்பட்டது.

7)

1) கோசிக்கா திவில் அஜாசியோ என்ற இடத்தில்

2) பிரான்சில் பாரிஸ் நகரில்

3)

- பீரங்கிப் படையின் உதவி அதிகாரியாக நியமனம் பெறல்
- 1793 இல் டுலோங் (லோன்) நகரைக் கைப்பற்றியிருந்த ஆங்கிலேயரை வெற்றி கொள்ளல்
- 1796 இல் இத்தாலியை ஆக்கிரமித்து வெற்றி கொள்ளல்
- 1798 இல் எகிப்திய படையெடுப்பு (நைல் நதிப்போரில் தோல்வியுற்ற போதிலும் மக்களின் ஆதரவு தொடர்ந்து இருத்தல்)

- டைரக்டரி அரசாங்கத்தை கவிழ்த்தல், முதல் கொன்சலாகப் பதவி ஏற்றல்
- 1802 அம் ஆண்டு நெப்போலியன் வாழ்நாள் முழுமைக்கும் கொன்சலாகப் பதவி வகிக்க வேண்டும் என்று பிரெஞ்சு மக்கள் வாக்களித்தல்
- 1804 ஆம் ஆண்டு பிரான்சின் பேரரசாக முடிசூடல்

4)

- தனது அதிகாரத்தை நிலைநாட்டிக்கொள்ளும் அரசியல் அமைப்பை ஏற்படுத்துதல், மக்கள் திர்ப்பின் மூலம் தனது செயற்பாட்டிற்கு மக்களின் விருப்பத்தை பெறல்
- ஸ்தல ஆட்சி முறையில் பல சீர்திருத்தங்களை மேற்கொள்ளல், பிரிபெக்ட்கள் , துணை பிரிபெட்கள் ஆகியயோருக்கு நிறைய அதிகாரங்கள் கொடுக்கப்பட்டன
- நிதியான வரி அறவிரம் முறையை ஏற்படுத்தல் நிலமைக்கு ஏற்ப பதவி வழங்கும் முறையை செயற்படுத்தல்
- பாப்பரசருடன் ஒன்றுபட்டுக் கத்தோலிக்க சபைக்கும் அரசுக்கும் இடையே நிலவிய முரண்பாடுகளை தீர்த்தல்
- நெப்போலிய சட்டக்கோவை வழியாகப் பிரான்சிற்கு ஒரே விதமான சட்டத்தொகுப்பை அளித்தல். பிரான்சியப் புரட்சியின் அடிப்படை கொள்கைகள் பலவற்றை அதில் உள்ளடக்குதல்
- புரட்சிக் காலத்தில் ஆரம்பித்த கல்விச் சீர்திருத்தத்தை முன்னெடுத்துச் சென்று முக்கிய நகரங்களில் லைசிஸ் என்ற உயர் பாடசாலைகளை நிறுவியதுடன் ஆசிரியர்களை பயிற்றுவிக்கும் பொருட்டு பாரிசில் பாடசாலை ஒன்றையும் நிறுவுதல்
  தேசிய பல்கலைக்கழகம் ஒன்று பாரிசில் நிறுவப்படல்
- பிரான்சை வலுப்படுத்த தேவையான பொருளாதாரக் கொள்கையை செயற்படுத்தல்
- "நானே புரட்சி" என்று கூறிய பொழுதிலும், அவனது சில செயற்பாடுகள் புரட்சி கொள்கைகளுக்கு எதிராக இருத்தமை.

8)

1) புதிய ஏகாதிபத்தியம்
   - ஆசிய, ஆபிரிக்கப் பிரதேசங்களில் குடியேற்றங்கள் தொடர்பாக ஐரோப்பிய இனத்தவரிடையே இருந்த கருத்து வேறுபாடுகளும் போட்டியும்
   - புதிய ஏகாதிபத்தியத்தின் கீழ் எழுச்சி பெற்று வந்த ஜேர்மனிக்கும் பிரித்தானியாவுக்கும் இடையே கடற்படையை வலிமைப்படுத்துவதில் இருந்த போட்டி

2) பாதுகாப்பு உடன்படிக்கை முறைகள்
   - பிஸ்மார்க்கின் இராஜதந்திரக் கொள்ளைகளுக்கேற்ப ஜேர்மனியை ஐரோப்பாவில் பலம் வாய்ந்த அரசாக ஏற்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கைகள்
   - அல்சேஸ் லொரேன் பிரச்சினையினால் பிரான்சைத் தனிமைப்படுத்தும் பொருட்டுப் பிஸ்மார்க் ஆரம்பித்த உடன்படிக்கை முறையினால் ஐரோப்பா இரு அணிகளாக பிரிதல்
   - பிரான்சிய அணிக்கு ரஷ்யாவும் பிரித்தானியாவும் இணைந்தவிதம்
   - ஜேர்மனிய அணிக்கு ஆஸ்திரியாவும் இத்தாலியும் இணைந்தவிதம்

3) போல்கன் நெருக்கடி
   - முதலாம் உலக யுத்தம் ஏற்படுத்துவதற்கு உடனடிக்காரணமாக இப்பிரச்சினை சம்பவம்
   - சரஜிவோ சம்பவம்

9) **பாசிசம்**

1.

- இத்தாலியில் ஆரம்பமானது கட்டளையிடும் நிர்வாக முறையிலான சர்வதிகார ஆட்சியாக அமைந்தது.
- முதலாம் உலக யுத்தத்தில் இத்தாலி வெற்றி பெற்ற அணியில் இருந்த போதிலும் எதிர்பார்த்த பலன் கிடைக்கவில்லை.
- யுத்தம் காரணமாக இத்தாலியின் பொருளாதாரம் வீழ்சியுற்றல்
- பாராளுமன்ற முறை தோல்வி கண்டதுடன் அதன் மீது வெறுப்பும் ஏற்படல்
- பாசிசக் கட்சியின் எழுச்சி
- முசோலியின் திறமை கறுப்புச் சட்டைப் படையணியை உருவாக்கியமை மக்களை கவரும் வாக்குறுதிகளை வழங்கியமை
- முசோலியின் செயற்பாடு பொருளாதபர ரீதியில் நாட்டை மேம்படுத்தியமை லாத்திரன் உடன்படிக்கை பாப்பரருடன் மேற்கொண்டமை

**விளைவு**

- இரண்டாம் உலக யுத்ததிற்கு பின்னணியாக அமைந்தமை
- கம்யூனிஸ்ட் வாதத்திற்குச் சவாலாக அமைந்தமை
- 2ம் உலக மகாயுத்தத்தில் ஜனநாயகத்தை மதித்த மேலை நாட்டவரின் வெற்றி காரணமாகப் பாசிசம் தோல்வியுறல்
- கட்சியின் தீவிரவாதிகளால் முசோலினியும் அவரது மனைவி பெற்றாக்கியும் மிலானில் தூக்கிலிடப்பட்டனர்.

**2. சொல்வரைன்**

- பிரஷ்யாவின் தலைமைத்துவத்தில் 1834 இல் தோற்றம் பெற்றமை
- ஜேர்மனியின் அனைத்து அரசுகளும் இதனுடன் தொடர்புடைதாயிருத்தல்
- அரசுகளிடையே சுங்கவரி முறையற்ற திறந்த வர்த்தக முறை இடம் பெற்றது
- ஜேர்மனிய அரசுகளிடையே ஒருவித பொருளாதார இணைப்பை ஏற்படுத்த இச்சங்கத்தால் முடிந்தமை
- வர்த்தக அடிப்படையில் எழுந்த இப்பொருளாதார ஒற்றுமை, பிற்காலத்தில் அரசிபலில் ஒற்றமை ஏற்பட அடித்தளமாக அமைந்தமை

**3. ஜோசப் ஸ்ராலின்**

1. ஜோர்ஜியாவில் பிறந்த ஜோசப் ஸ்ராலின் (1879 – 1953) இளைஞராக இருந்த போதே புரட்சிச் செயற்பாடுகளில் ஈடுபடல்
2. ரஷ்ய சமூக ஜனநாயகத் தொழிலாளர் கட்சியில் சேர்ந்த அவர் அக்கட்சியில் சிறப்பாக இயங்கினார்
3. பிராவ்டா செய்தித்தாள் தொடங்கியபோது அதன் ஆசிரியராகப் பொறுப்பேற்றார்
4. போல்ஷ்விக் புரட்சியில் லெனினுக்கு உதவிய அவர் கம்யூனிஸ்ட் அரசாங்கத்தின் அமைச்சரவையில் தேசிய இனங்களின் அமைச்சராக நியமனம் பெற்றார் பின்னர் கட்சியின் செயலாளரானார்
5. லெனின மரணத்தின் பின்னர் ஸ்டாலினுக்கும், ரொட்ஸ்திக்கும் இடையே பாரிய மோதல்கள் ஏற்பட்டன
6. 1924 ம் ஆண்டு ஸ்டாலின் சோவியத் அரசின் தலைவரானார்
7. மிகப்பெரிய நாடான ரஷ்யாவில் ஏராளமான மக்களும் மூல வளமும் இருப்பதால் அது தனியாக சோஷலிச நாடாக நீடிக்க முடியும் என வாதிட்டார்.
8. ரஷ்சியாவின் பொருளாதபர வளர்ச்சிக்காகப் பல நிட்டங்களைத் தீரட்டினார்
9. ஐந்தாண்டுத் திட்டத்தை சிறப்பாக செயற்படுத்தினார்
10. 2ம் உலக மகாயுத்தம் ஆரம்பிக்கும் போது ரஷசியா உலகில் பலம் வாய்ந்த அரசாக எழுச்சி பெற்றிருந்தது. இவ்வாறு ரஷ்யா எழுச்சி பெற்றதில் ஸ்ராலினுக்குப் பெரும் பங்குண்டு
11. 2ம் உலகப் போரில் நேசநாடுகளுடன் இணைந்து செயற்பட்டு, நாசிசவாதத்தையும், பாசிசவாதத்தையும் அழிப்பதற்கு உதவினார்

**4. கவுண்ட் கபூர்**

1. கவுண்ட் கபூர் (1810 – 1861), 1852 ம் ஆண்டு பீட்மண்ட் - சாடினீய அரசின் பிரதம மந்திரியாக நியமனம் பெற்றார்.
2. கவூர் இத்தாலியை இணைப்பதில் பெரும் பங்கு ஆற்றினார் இத்தாலியை பீட்மண்ட் - சாடீனிய அரசின் கீழேயே இணைக்க வேண்டுமெனவும், அதன் பொருட்டு வெளிநாடுகளின் ஒத்துழைப்பைப் பெற வேண்டுமெனவும் நம்பினார்
3. பீட்மண்ட் - சாடினீய அரசை அபிவிருத்தி செய்யவும், அதன் படை வலிமையை அதிகரிக்கவும் நடவடிக்கைகளை மேற்கொண்டார்
4. ஆஸ்திரியாவுக்கு எதிராகப் போர் செய்வதற்குப் பிரான்சின் 3ம் நெப்போலியனின் உதவியைப் பெற்றார்
5. ஆஸ்திரிய – சார்டினியப் போரில் லொம்பாடியைப் பெற்றுக்கொள்ளல் மத்திய இத்தாலிய அரசை சாடீனியாவுடன் இணைத்தல்
6. கரிபால்டியின் உதவியுடன் நேப்பிள்ஸ், சிசிலி ஆகியவற்றைப் பெற்றுக்கொள்ளல்
7. 1861 இல் சாடீனியாவின் விக்டர் இமானுவேல் இத்தாலியின் அரசன் என பிரகடனம் செய்தல்
8. கவூரின் வழிகாட்டலில் பல நூற்றாண்டுகளாகப் புவியியல் விவகாரமாக இருந்த இத்தாலி தேசிய அரசாக மாறியது

***5. சர்வதேச சங்கம்***

1. உலகில் அமைதியை ஏற்படுத்தும் நோக்கத்துடன் 1ம் உலகப் போரின் இறுதியில் சர்வதேச சங்கம் அமைக்கப்பட்டது
2. யுத்தத்தின் போது 14 அம்சத்திட்டம் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஜனாதிபதி வூட்ரோ வில்சனால் முன்வைக்கப்பட்டது
3. அதன்படி உலகில் அமைதியைக் காக்கும் பொருட்டு உலகளாவிய பாதுகாப்பினை நோக்கமாகக் கொண்டு செயற்படுதலே இவ்வமைப்பின் குறிக்கோளாக அமைந்தது
4. ஜெனிவாவை மத்திய நிலையமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட சர்வதேச சங்கம் பலர்வேறு தேவைகளை மையமாகக் கொண்டு பணியாற்றியது
5. இச்சங்கம் தனது நோக்கத்தை நிறைவு செய்வதில் தோல்வி கண்டதெனலாம்
6. தோல்விக்கான காரணங்கள்
7. சர்வதேச சங்கத்தின் அமைப்பில் காணப்பட்ட குறைபாடுகள்
8. ஐக்கிய அமெரிக்கா சர்வதேச சங்கத்தில் அங்கத்துவம் வகிக்காமை
9. அங்கத்துவ நாடுகள் சங்கத்தின் நோக்கத்தை மதிக்காது செற்பட்டமை
10. வல்லரசுகளின் ஆக்கிரமிப்பை தடுக்க படைபலம் இல்லாமை
11. தீர்மானங்கள் எடுப்பதில் தாமதம் ஏற்பட்டமை